**தேசிய போக்குவரத்து மருத்துவ நிறுவகம் - 2023**

-----------------------------------------------------------------------

**1. நிதிக்கூற்றுக்கள்**

**1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

தேசிய போக்குவரத்து மருத்துவ நிறுவகத்தின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று , உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளின் பொழிப்பு உள்ளடங்கிய நிதிக்கூற்றுக்களிற்கான குறிப்புக்களை உள்ளடக்கிய 2023 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டம் மற்றும் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டம் என்பவற்றின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

எனது அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து நிறுவகத்தின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

எனது அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அவ் நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் இந்த அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்**

நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, நிறுவகம் தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது நிறுவகத்தை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிறுவகத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் நிறுவகத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு நிறுவகம் அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

### 1.4 கணக்காய்வின் நோக்கெல்லை (நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்)

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்தும் நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாதத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது தவறான கூட்டிணைவு, தவறான ஆவணம் தயாரித்தல், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி நிறுவகத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின்

பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு நிறுவகத்திற்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியளவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் நிறுவகத்தின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

வேண்டப்பட்டவாறு எந்த நேரத்திலும் பின்வரும் விடயங்களை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாக கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- நிறுவகத்தின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- நிறுவகத்தின் ஆளுகை சபையால் வழங்கப்பட்ட பொருத்தமான எழுத்துமூலமான சட்டம் அல்லது ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் நிறுவகம் இணங்கியிருந்ததா என்பதும்,

- நிறுவகம் அதன் அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்ததா என்பதும், மற்றும்

- நிறுவகத்தின் வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

## 1.5 நிதிக்கூற்றுக்களை தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.5.1 இலங்கைப் பொதுத் துறைக் கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமை

| | குறிப்பிட்ட நியமங்களுடனான தொடர்புகளுடன் இணங்காமை | முகாமைத்துவக் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | பொதுத்துறை கணக்கீட்டு நியம இலக்கம் 01 நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்தல் தொடர்பான நியமத்தின் 76 – 87 ஆம் பந்திகளுக்கு இணங்க நடைமுறை மற்றும் நடைமுறையல்லாச் | 2024 ஆம் வருடத்தின் நிதிக்கூற்றுக்களில் இடர்க்கடன் நடைமுறை மற்றும் நடைமுறையல்லாச் சொத்துக்களாக வேறுபடுத்துவதற்கு நடவடிக்கை | கணக்கீட்டு நியமத்தின் பிரகாரம் நடைமுறைச் சொத்துக்கள் மற்றும் நடைமுறையல்லாச் |

| | | | |
|---|---|---|---|
| | சொத்துக்கள் வகைப்படுத்தப்பட்டு நிதி நிலைமைக்கூற்றின் முன்பக்கத்தில் தனியாக காட்டப்பட வேண்டிய போதிலும் நிறுவனத்தின் ரூபா 51,953,115 ஆன பெற வேண்டிய இடர்க்கடன் பெற வேண்டிய காலப்பகுதியின் அடிப்படையில் நடைமுறையல்லாச் சொத்துக்களாக காட்டப்படுவதற்குப் பதிலாக அக்கடன் மீதி நடைமுறைச் சொத்துக்களின் கீழ் காட்டப்பட்டிருந்தது. | எடுக்கப்படும். | சொத்துக்களாக வேறுபடுத்தி காட்டப்பட வேண்டும். |
| (ஆ) | முழுமையாகத் தேய்மானமிடப்பட்ட ரூபா 55,628,433 பெறுமதியான சொத்துக்கள் தொடர்பாக இலங்கை கணக்கீட்டு நியம இலக்கம் 07 இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | நிறுவனத்திற்குச் சொந்தமான தற்போது தேறிய பூச்சிய மதிப்புடனான சொத்துக்கள் ரூபா 55,628,433.00 ஆன பெறுமதியொன்று நிதிக்கூற்றுக்களில் ஆதனம் பொறி மற்றும் உபகரணங்களின் கீழ் காணப்பட்டது. எதிர்காலத்தில் இச் சொத்துக்கள் அனைத்தும் கணக்கீட்டு நியமம் 07 இன் பிரகாரம் மீள் மதிப்பீடு செய்யப்பட்டு நிதிக்கூற்றுக்களில் எடுக்கப்படுவதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது. | கணக்கீட்டு நியமத்தின் பிரகாரம் சொத்துக்கள் மீள் மதிப்பீடு செய்யப்பட்டு கணக்கீடு செய்யப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (இ) | குத்தகை ஒப்பந்தத்தின் கீழ் 2 கட்டிடங்கள் 3 வருடங்களுக்கு மற்றும் 2 கட்டிடங்கள் 5 வருடங்களுக்கு பெறப்பட்டிருந்தன. ஆனால் அவற்றுக்காக செலுத்தப்பட்டிருந்த ரூபா 4,627,108 ஆன பழுதுபார்த்தல் செலவுகள் மூலதனமாக்கப்பட்டிருந்ததுடன் அந்த மூலதனமாக்கப்பட்ட செலவு கட்டிடங்களின் குத்தகை காலப்பகுதிக்குள் பதிவளிக்கப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படாது 40 வருட காலப்பகுதியொன்றுக்கு எடுக்கப்பட்டிருந்தமையால் மீளாய்வாண்டில் ரூபா 929,351 குறைவாக தேய்மானம் சீராக்கப்பட்டிருந்ததுடன் அதன் காரணமாக இலாபம் அந்த அளவினால் அதிகமாக காட்டப்பட்டிருந்தது. | அநுராதபுரம், களுத்துறை, மாத்தறை, திருகோணமலை ஆகிய கிளைகள் குத்தகைக்காலத்தை கருத்திற்கொண்டு அக்குறிப்பிட்ட வருடங்களில் குறைக்கப்பட்ட தேய்மானத் தொகையான ரூபா 929,351 ஆன தொகை 2024 ஆம் நிதிக்கூற்றின் திரண்ட இலாபத்திற்கு சீராக்கப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | கணக்கீட்டு நியமத்தின் பிரகாரம குத்தகை ஆதனம் கணக்கு வைத்தல் தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

### 1.5.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவக் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| நிலையான வைப்பு வட்டிக்காக வங்கியினால் அறவிடப்பட்ட நிறுத்தி வைத்தல் வரி ரூபா 8,740,974 ஆனது பெற வேண்டிய நிறுத்தி வைத்தல் வரிக் கணககிற்கு வரவு வைக்கப்பட்டு நிலையான வைப்பு வட்டிக் கணக்கிற்கு செலவு வைக்கப்பட வேண்டிய போதிலும், நிறுவனத்தின் நிலையான வைப்பு வட்டிக் கணக்கு வரவு வைக்கப்பட்டு, நிறுத்தி வைத்தல் வரி கணக்கு செலவு வைக்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் வட்டி வருமானம் மற்றும் வட்டியின் மீதான நிறுத்தி வைத்தல் வரி அந்த அளவினால் குறைவாகக் காட்டப்பட்டிருந்தது. | நிறுத்தி வைத்தல் வரி (withholding tax) கணக்கீடு செய்யப்பட்ட போது இத்தவறு ஏற்பட்டிருந்ததுடன் வருடத்திற்கான வருமானம் ரூபா 8,740,974 ஆன பெறுமதியால் குறைவடைந்திருந்தமையால், 2024 ஆம் வருடத்தின் திரண்ட இலாபத்திற்கு சீராக்கம் செய்யப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | வட்டியின் மீதான நிறுத்தி வைத்தல் வரி நிதிக்கூற்றுக்களில் காட்டப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |

### 1.6 பெற வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

### 1.6.1 பெற வேண்டிய பணம்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவக் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2023 திசெம்பர் 31 வரையான பெற வேண்டிய ரூபா 14,233,512 ஆன மீதியில் 2 முதல் 5 வரையான ஆண்டுகள் வரை அறவிடப்படாது காணப்பட்ட மீதி ரூபா 2,348,821 ஆக காணப்பட்டதுடன் 5 வருடங்களுக்கு மேற்பட்ட மீதி ரூபா 10,546,421 ஆக இருந்த போதிலும் குறிப்பிட்ட மீதிகளை அறவிடுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | இது தொடர்பாக இலங்கை போக்குவரத்துச் சபையுடன் கலந்துரையாடல் நடைபெற்று வருவதுடன் பணத்தை அறவிடுவது தொடர்பாக எதிர் காலத்தில் தீர்மானமொன்று எடுக்கப்படும். | பெற வேண்டியவைகளை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

### 1.7 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், முகாமைத்துவத் தீர்மானங்கள் போன்றவற்றுடனான இணங்காமைகள்

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் போன்றவற்றுடனான தெடர்பு | இணங்காமை | முகாமைத்துவக் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | 1977 இன் 25 ஆம் இலக்க தேசிய போக்குவரத்து மருத்துவ நிறுவகச் சட்டம் 3 (ஆ) பிரிவு | சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள செயற்பாடுகளின் பிரகாரம் கனரக வாகனங்கள் உட்பட அனைத்து வருடங்களிலும் மோட்டார் வாகனங்களின் சாரதிகள் மற்றும் ஓட்டுநர்கள் பரிசோதிக்கப்பட்டு அந்த சாரதி மற்றும் | வாடிக்கையாளர்களின் மருத்துவப் பரிசோதனைகளை மேற்கொள்வதற்கு தேவையான நியமங்கள் மற்றும் மருத்துவ அளவு கோல்கள் ஆரம்பம் முதல் அடையாளம் காணப்பட்டுள்ளதுடன் | நியமங்கள் மற்றும் அளவு கோல்கள் நாளது வரையாக்கப் படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | ஓட்டுநருக்கு உடல் மற்றும் உள ஆரோக்கியம் பற்றிய சான்றிதழ் வழங்கப்படுதல் மேற்கொள்ளப்படுகின்ற போதிலும், இரத்தத்தில் சீனியின் அளவு 200 இற்கு மேற்பட்ட வாடிக்கையாளர்கள் மருத்துவ பரிசோதனையில் தேர்ச்சி பெற்றிருந்ததுடன் முறைமையினால் மருத்துவப் பரிசோதனை அறிக்கையில் வாடிக்கையாளர்களின் பார்வையின் அளவு குறிப்பிடப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | தற்போது நியமங்கள் மற்றும் அளவு கோல்கள் இலங்கையில் அந்தந்த விடயத்துறைக்காக அமைக்கப்பட்டுள்ள விசேட மருத்துவக் கல்லூரிகளின் பரிந்துரைகளுடன் நாளது வரையாக்கப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | |
| (ஆ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் தாபன விதிக்கோவை | | | |
| i | ii ஆம் அத்தியாயத்தின் 10 ஆம் பிரிவு | பதவியொன்றுக்கு ஆட்சேர்ப்பு செய்யப்படும் ஒரு அதிகாரி சுகாதார 169 இன் பிரகாரம் மருத்துவப் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட வேண்டியுள்ள போதிலும், நிறுவகத்தின் உத்தியோகத்தர்களுக்கு அந்த அறிக்கை பெற்றுக்கொள்ளப்படாது மோட்டார் வாகன அனுமதிப்பத்திரத்தைப் பெற்றுக்கொள்வதற்கு முன்மொழியப்பட்ட மருத்துவ சான்றிதழ் வழங்கப்பட்டிருந்தது. பணிப்பாளர் சபையின் தீர்மான இலக்கம் 2021/67 இன் மூலமும் அரச மற்றும் கூட்டுத்தாபனங்களில் பயன்படுத்தப்படுகின்ற முறையில் மருத்துவப் படிவமொன்றை பயன்படுத்துமாறு அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்த | இதற்காக பணிப்பாளர் சபையின் அங்கீகாரத்திற்கு அனுப்பப்பட்டு அங்கீகரிக்கப்பட்டிருந்த போதிலும் புதிய மருத்துவப் படிவங்களைப் பயன்படுத்துதல் தொடர்பாக முன்னால் தலைவரின் அங்கீகாரம் பெறப்படவில்லை. ஆனால் இது தொடர்பாக மீண்டும் கலந்துரையாடி மருத்துவ சான்றிதழ் தொடர்பாக எதிர்காலத்தில் தீர்மானமொன்று எடுக்கப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | உரிய பிரிவின் பிரகாரம் மருத்துவ அறிக்கை சமர்ப்பிக்கப் படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | போதிலும் அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | | |
| ii | vi ஆம் அத்தியாயத்தின் 2.1 ஆம் பிரிவின் பிரகாரம் | நிரந்தரமாக தகுதிகாண் அல்லது ஒப்பந்தத்தில் ஒரு உத்தியோகத்தர் பதவிக்கு நியமிக்கப்படும் போது அந்த உத்தியோகத்தர்களுக் கான நடத்தைக் குறிப்புப் பத்திரமொன்று உடனடியாகத் தயாரிக்கப்பட வேண்டிய போதிலும் நிறுவனத்தின் பரிசோதிக்கப்பட்ட 6 தனிப்பட்ட கோவைகளில் நடத்தைக் குறிப்புக்கள் உள்ளடக்கப்பட்டிருக்க வில்லை. | எமது நிறுவகத்திற்கு பொருத்தமான முறையில் நடத்தை குறிப்பு பத்திரமொன்று தயாரிக்கப்பட்டு எதிர்காலத்தில் கோவைகளில் உள்ளடக்குமாறு அறிவித்தல் வழங்கப்பட்டுள்ளது. | உரிய பிரிவின் பிரகாரம் நடத்தைக் குறிப்புப் பத்திரம் இணைக்கப்பட்டு பராமரிக்கப் படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (இ) | பெறுகை வழிகாட்டிக் கோவை | | | |
| | 5.4.10 ஆம் பிரிவு | இப் பிரிவின் பிரகாரம் ஒப்பந்தமொன்றின் ஒப்பந்தகாரரினால் ஒப்பந்தம் மீறப்படும் பட்சத்தில் பெறுகை நிறுவனத்தைப் பாதுகாப்பதற்காக மதிப்பிடப்பட்ட ஒப்பந்தத் தொகையில் ஐந்து சதவீத்திற்கு குறையாத தொகையொன்று செயல்திறன் பாதுகாப்பொன்றாக பெறப்பட வேண்டிய போதிலும் 2022/2023 ஆம் வருடத்திற்காக பாதுகாப்பு சேவைகளை வழங்குவதற்காக செயல்திறன் பாதுகாப்பொன்று பெறப்பட்டிருக்கவில்லை. | 2020/2021 ஆம் ஆண்டுகளுக்காக மட்டும் செயல்திறன் பாதுகாப்பொன்று பெறப்பட்டிருந்தது. | பெறுகை வழிகாட்டிக் கோவையின் பிரகாரம் செயல்திறன் பாதுகாப்பொன்று பெற்றுக் கொள்ளப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டிற்கான செயற்பாட்டு விளைவுகள் ரூபா 957,640,668 இலாபமொன்றாக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் இலாபம் ரூபா 422,911,482 ஆகும். அதன் பிரகாரம் நிதி விளைவுகளில் ரூபா 534,729,186 ஆன முன்னேற்றமொன்று அவதானிக்கப்பட்டது. முக்கிய மருத்துவ சேவை வருமானம் ரூபா 418,584,701 ஆல் அதிகரித்திருந்தமை இந்த முன்னேற்றத்திற்கு காரணமாக இருந்தது.

## 2.2 பிரதான வருமான செலவின விடயங்களின் போக்கு தொடர்பான பகுப்பாய்வு

மீளாய்வாண்டில் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது மருத்துவ நிறுவகத்தின் முக்கிய வருமான உருப்படிகளில் உள்ளடங்கியுள்ள இலகுரக வாகன பரிசோதனை/புதுப்பித்தல் வருமானம் 68 சதவீதத்தாலும் கனரக வாகன பரிசோதனை வருமானம் 102 சதவீதத்தாலும் மற்றும் கனரக வாகன புதுப்பித்தல் வருமானம் 42 சதவீதத்தால் அதிகரித்திருந்தன.

## 2.3 விகிதப் பகுப்பாய்வு

மீளாய்வாண்டிற்கான நடைமுறை சொததுக்கள் விகிதம் 0.31 ஆக இருந்ததுடன், முன்னைய ஆண்டின் நடைமுறை சொததுக்கள் விகிதம் 4.08 ஆக இருந்தது. மீளாய்வாண்டில் ரூபா 700 மில்லியன் தொகையொன்று திறைசேரிக்கு அனுப்பி வைக்கப்பட்ட காரணத்தினால் ஆண்டின் நடைமுறை விகிதம் குறைவடைந்திருந்தது. மீளாய்வாண்டிற்கான இலாப விகிதம் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும்போது 57 சதவீதத்தால் அதிகரித்திருந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 பெறுகை முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவக் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| நுகேகொட தலைமை அலுவலகத்தின் சாரதி மற்றும் பாதுகாப்பு ஓய்வறை கட்டிடத்தின் முதலாம் மாடி 180 நாட்களில் நிர்மாணிக்கப்படுவதற்கு 2022 பெப்ரவரி 09 ஆம் திகதி தனியார் கம்பனியொன்றுடன் வட் வரியுடன் ரூபா 6,629,903 ஆன பெறுமதிக்கு ஒப்பந்தமொன்று செய்யப்பட்டிருந்தது. ஒப்பந்தகாரருக்கு 2024 ஆம் வருடம் வரை ரூபா 7,309,432 செலுத்தப்பட்டிருந்த போதிலும், நிர்மாண நடவடிக்கைகள் முடிக்கப்பட்டிருக்கவில்லை. | நிர்வாகம் இது தொடர்பாக பல சந்தர்ப்பங்களில் நடவடிக்கைகளை எடுத்திருந்ததுடன். பல பணிப்பாளர் சபை பத்திரங்கள் பணிப்பாளர் சபைக்கு அனுப்பபட்டிருந்தன. மேலும் அரசாங்கத்தினால் அவ்வப்போது வெளியிடப்படுகின்ற அரச செலவு முகாமைத்துவம் சுற்றறிக்கைகளின் பிரகாரம் எமது கடமைகளைச் செய்ய வேண்டும். மேந்படி விடயங்கள் காரணமாக 2023 ஆம் வருடத்திற்கான பெறுகைத் திட்டத்தின் பிரகாரம் இப் பணியை முடிப்பதற்கு முடியாதிருந்தது | ஒப்பந்த உடன்படிக்கை மற்றும் பணிப்பாளர் சபைத் தீர்மானத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

### 3.2 மனித வள முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவக் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| நிறுவனத்திற்கு வைத்தியர்கள், நிர்வாக அதிகாரிகள் தரவு பகுப்பாய்வாளர்களின் ஆட்சேர்ப்பு தொடர்பான ஆட்சேர்ப்பு நடைமுறைக்காக அங்கீகாரம் வழங்கப்படாத காரணத்தினால் நிறுவனத்திற்குத் தேவையான 67 வைத்தியர்கள், 17 நிர்வாக அதிகாரிகளை ஆட்சேர்ப்பதற்கு முடியாதிருந்தது. | நிறுவனத்தில் நிரந்தர வைத்திய அதிகாரிகள் குறைந்தளவில் காணப்படுகின்றனர் நிரந்தர வைத்திய அதிகாரிகளை ஆட்சேர்ப்பதற்கு நீண்டகாலமாக பத்திரிகை விளம்பரங்கள் பிரசுரிக்கப்பட்டு முயற்சிகள் எடுக்கப்பட்டு வருகின்ற போதிலும் அரச மருத்துவ அதிகாரிகளின் சம்பளம் மற்றும் படிகளின் அடிப்படையில் எமது நிறுவனத்தினால் வைத்திய அதிகாரிகளுக்கு செலுத்தப்படுகின்ற | அங்கீகரிக்கப்பட்ட ஆட்சேர்ப்பு நடைமுறையின் பிரகாரம் வெற்றிடங்கள் நிரப்பப்பட வேண்டும். |

படிகள் குறைவானது என்பதால் நிரந்தர வைத்திய அதிகாரிகள் நிறுவனததிற்கு சேவைக்கு வருவதற்கு தயங்குகின்றனர். எனவே ஒப்பந்த அடிப்படையில் ஆட்சேர்ப்பு செய்யப்பட்டு வாடிக்கையாளர்களுக்கு சிரமம் ஏற்படாதவாறு சேவை தொடர்ந்து பேணப்பட்டு வருகின்றது.

நிர்வாக அதிகாரி பதவிக்கான ஆட்சேர்ப்பு நடைமுறை அங்கீகாரத்திற்காக சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.